www.tamilarangam.net



கொழும்பு - 07.
19.04.1992.

# தொழிலாளி வர்க்கத்தின் போராட்டத்தில் பிறந்தது மேதினம்.

எமது நாட்டுத் தொழிலாளி வர்க்கம் நமது உழைப்பால் உருவாக்கிய அனைத்துத் தொழில்களையும்
வளங்களையும் இன்று அந்நிய நாட்டவரின் முதலீட்டு வலயங்களுக்கும், தனியார்மயப்படுத்தலுக்கும் இழந்து
வருகிறார்கள். வெளிநாட்டு மூலதனத்துக்கு எமது நாட்டுத் தொழிற்சட்டங்களே செல்லுபடியற்ற சுதந்திர வர்த்தக
வலயத்தில் எமது நாட்டுத் தொழிலாளர் சுதந்திரம் எதுவுமற்ற வர்த்தகப் பொருளாக மாற்றப்பட்டு விட்டார்கள்.
அவர்களின் தொழிற்சங்கம் அமைக்கும் சுதந்திரம்கூட மறுக்கப்பட்டு முதலீட்டாளர்களுக்கு சர்வ சுதந்திரம் வழங்கப்பட்டு
விட்டது.

எமது வடக்கு கிழக்கு மாகாண அரசில் ஒரு பகுதியாகிய திருகோணமலைத் துறைமுகத்தில் பிறிமா மா
ஆலைக்கு இறங்கு துறையே வழங்கப்பட்டு விட்டது. அங்கே கப்பலில் உள்ள கோதுமை நேராக ஆலைக்கே செல்கிறது.
அதேபோல் அங்கு அரைக்கப்படும் மா மீண்டும் சுதந்திரமாக கப்பலில் வெளியேறுகிறது. இங்கு சுங்கப் பரிசோதனை
இருக்கிறதா என்பது கூட தெரியவில்லை. இதைப்போலவே டோக்கியோ சீமெந்து ஆலைக்கு தேவையான மூலப்
பொருட்கள் கூட கப்பலில் இருந்து நேராக ஆலைக்கு வருகிறது. எமது நாட்டில் உள்ள எந்த உற்பத்தியாளருக்கும்
இல்லாத தனிச் சலுகை மேற்படி வெளிநாட்டுக் கம்பனிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எமது நாட்டின் சுதந்திரம் அந்நிய
முதலீட்டாளரால் எவ்வாறு பறிமுதல் செய்யப்படுகிறது என்பதற்கு இவை நல்ல உதாரணங்களாகும்.

இந்த விதமான எமது நாட்டின் பொருளாதார சுதந்திரம் எமது நாணய மதிப்பு என்பன உலக வங்கி, சர்வதேச
நாணய நிதியம் ஆகியவற்றால்தான் நிர்ணயிக்கப்படுகிறது. இலங்கை விவசாயிகளுக்கு உரமானியம் வழங்குவதும் எமது
நாட்டு ஏழை மக்களுக்கு உணவு மானியம் வழங்குவதும் இவ்வாறுதான் நிறுத்தப்பட்டு விட்டது. இதனால் கடந்த 15
வருட ஆட்சியில் அமெரிக்க டொலர் ஒன்று 5 1/2 மடங்குக்கு மேலாக பெறுமதி அதிகரிக்க எமது ரூபா நாணயம் 5 1/2
மடங்கு பெறுமதி குறைந்து விட்டது. இந்தவகையில் விலைவாசி நாளும்பொழுதும் விசம்போல் ஏறிவர இதற்கேற்ற ஊதிய
உயர்வு அற்ற முறையில் இலங்கை உழைக்கும் மக்கள் அவதியுறுகிறார்கள். அந்நிய பொருட்களின் தாராள இறக்குமதி
உள்நாட்டு உற்பத்தியை சீர்குலைத்து வாழ்க்கைச் செலவை மேலும் மேலும் அதிகரிக்கச் செய்து வருகிறது.

ஆகவே நாட்டில் நேர்மையான உழைத்து வாழ முடியாத மக்கள் லஞ்சம் ஊழல் மோசடிக்கு இரையாகிறார்கள்.
கடத்தல் தொழில் சாதாரண அபின் கஞ்சாவில் இருந்து இன்று ஹெரோயின் போதைப் பொருள் ஆயுதக்கடத்தல் வரை
முன்னேறிவிட்டது. தேவையற்ற 'யுத்தம் ஒன்று வடக்கு கிழக்கு மக்கள்மேல் திணிக்கப்பட்டுள்ளதால் வடக்கு கிழக்கு மக்கள்
ஜனநாயக சுதந்திரம் அத்தனையும் இழந்து அகதிகளாக்கப்பட்டு அல்லல் பட நேர்ந்துள்ளது. இதனால் யுத்ததில் அநியாய
உயிரிழப்புகளும் பெரும் பொருள் இழப்புகளும் ஏற்படுவதுடன் அதன் பளுவை மக்கள்தான் சுமக்க வேண்டியுள்ளது. இது
போதாதென்று யுத்தத்திற்கான வரியை வேறு மக்கள் செலுத்ததும் நிலை உருவாகி விட்டது. வடபகுதி மக்கள்
பொருளாதாரத் தடைக்கு மட்டுமல்ல, மின்சார எரிபொருள் தடை, உரத்தடைக்கும் உள்ளாக்கப்பட்டுள்ளார்கள். இதனால்
உற்பத்தியில் ஈடுபடும் தனிமனித சுதந்திரம் மறுக்கப்பட்டு விட்டது. கிழக்கிலங்கையில் பரஸ்பர படுகொலைகள் தொடர்
கதையாக நீண்டு வருகிறது. இவ்வளவு கஷ்டங்களின் மத்தியிலும் உற்பத்தி செய்த நெற் சூடுகள் எரியூட்டப்படுகிறது.
வயலில் வேலை செய்தவர்கள் கைது செய்யப்படுகிறார்கள். மனிதப் படுகொலைகள் காணாமல் போதல் முழு நாட்டிலும்
சர்வசாதாரணமாகி விட்டது.

இந்த நிலையில் சர்வதேச தொழிலாளர் தினமான மேதினத்தை நாம் கொண்டாட இருக்கிறோம். உலகத்
தொழிலாளர்களே ஒன்று படுவீர் என்ற உன்னத போராட்ட பதாகை முதலாளித்துவ மேலாதிக்க வாதிகளால்
சிதை ப்பட்டு விட்டது. முதலாவது தொழிலாளி வர்க்க அரசு என்று சொல்லப்பட்ட சோவியத் அரசு இருந்த இடம்
தெ மல் இல்லாமல் ஆக்கப்பட்டு விட்டது. ஏகாதிபத்திய வாதிகளின் பிரித்தாளும் சூட்சிக்கு இந்த நாடு இரையாகி
வ து. இதற்கு காரணகர்த்தாக்களான முதலாளித்துவ பாதையாளர்கள் தமக்குள் தாமே அதிகாரத்துக்காக இன்று
மல்லுக்கட்டி நிற்கிறார்கள். ஜனநாயம் வாழ்வதாக கூறும் ஐரோப்பாவில் மீண்டும் நாசிசம் நவீன முறையில் உருவாகி
வருகிறது. அதற்கு அந்த நாடுகளுக்குச் சென்ற அரசியல் அகதிகளும் பொருளாதார பரதேசிகளும் இலக்காகி
வருகிறார்கள்.

அனைவருக்கும் எட்டுமணி நேர வேலை என்று உரிமை முழக்கம் செய்த சிக்காகோ தொழிலாளர் பேரணி
ஆளும் அதிகார வர்க்கத்தின் துப்பாக்கிக்கு இரையாகி உயிர்த்தியாகம் செய்து உதிரம் சிந்தியதில் பிறந்த தினம் மேதினம்.
இத் தினத்தை சர்வதேச தொழிலாளர் தினமாக கொண்டாட அறைகூவல் விட்டது [illegible]வது தொழிலாளி வர்க்க
அகிலம். அதை ஏற்று அன்றிலிருந்து இன்றுவரை அனைத்து நாடுகளிலும் தொழிலாளி வர்க்கம் தனது போராட்ட
தினமாக அதைக் கொண்டாடி வருகிறது. இந்த மேதினம் பல நாடுகளில் விடுமுறை தினமாக நடைமுறைக்கு வந்துள்ளது.
அந்த வகையில் எமது நாடும் மேதினத்தை விடுமுறை தினமாக பெற்றெடுத்துள்ளது. இலங்கைத் தொழிலாளி வர்க்கம்
நடத்திய பல வர்க்கப் போரரட்டங்களில் பல தொழிலாளர்கள் உயிர்த் தியாகம் செய்துள்ளார்கள். பலர் சிறை
சென்றுள்ளார்கள் பலர் நீதி மன்றத்தில் குற்றவாளி கூண்டில் நிறுத்தப்பட்டார்கள். ஆயினும் அவர்களின் போராட்ட
துவசம் இந்த நாட்டுத் தொழிலாளி வர்க்கத்திற்கும் உழைக்கும் எண்ணற்ற உரிமைகளை வென்றெடுத்துக் கொடுத்துள்ளது.
இன்று எட்டுமணி நேர வேலை அனைத்து நாடுகளும் ஏற்றுக் கொண்ட ஒரு நடைமுறையாகி வருகிறது. சிக்காக்கோ
போராட்டத்தில் சிந்திய இரத்தத்தில் சிவந்த செங்கொடி இன்று உலகலாவிய முறையில் பறப்பதில் எவரும்
ஆச்சரியப்படுவதற்கு எதுவுமில்லை.

சர்வதேச தொழிலாளர் தினமான மேதினம் வர்க்கப் போராட்டத்தில் பிறந்தது. வர்க்கப் போராட்டத்தில்
வளர்ந்தது. முதலாளித்துவ களியாட்ட விழாக்களால் இது மழுங்கடிக்கப்பட்டபோதும் திசை திருப்பப்பட்ட போதும்
இன்னமும் உயிர் வாழ்ந்து வருகிறது. எமது நாட்டில் 1953 ஆகஸ்ட் ஹர்த்தால் வரை வர்க்கப் போராட்டம் உத்வேகம்
அடைந்து வந்ததை அனைவரும் அறிவர். 1947 பொது வேலை நிறுத்தம் இந்த நாடு சுதந்திரம் அடைவதற்கும் ஒரு
காரணியாக இருந்தது என்பதை பலரும் வசதிக்காக இதை மறந்து விட்டார்கள். புத்திசாலிகளான பிரித்தானிய
ஏகாதிபத்திய வாதிகள் இரண்டாவது உலக யுத்தத்தின் பெறுபேறாக காலனி நாடுகள் சுதந்திர நாடுகளாக மாறுவதைத்
தவிர்க்க முடியாது என்று உணர்ந்ததாலும், இந்திய சுதந்திரப் போராட்டத்தின் வீச்சாலும் இலங்கையின் 1947 பொது
வேலை நிறுத்தம் ஏற்படுத்திய அதிர்ச்சியாலும், ஆபத்தில்லாத தங்கள் சகாக்களுக்கு அதிகாரத்தைக் கைமாற்றியதே

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இலங்கையின் சுதந்திரமாகும். இந்த சுதந்திரப் பாதையில் விதேசிகளுக்கு சமிக்கை காட்டிய 1953 வரவு செலவுத் திட்டத்தை பாராளுமன்றத்தில் அறிமுகம் செய்தவர் முன்னாள் நிதி அமைச்சரும் பின்னாள் ஜனாதிபதியுமான ஜே. ஆர். ஜெயவர்த்தன ஆகும். அதற்கு எதிராக கிளர்ந்தெழுந்ததே அன்றைய ஆகஸ்ட் ஹர்த்தால். இந்த ஹர்த்தால் தெற்கிலிருந்து வடக்கு வரை கிழக்கிலிருந்து மேற்குவரை முழு நாட்டையும் ஸ்தம்பிக்கச் செய்த பெரும் மக்கள் போராட்டமாகும்.

இந்தப் போராட்டம் அனைத்து உழைக்கும் மக்களும் தனது உழைப்பை நிறுத்தி, அனைத்து போக்கு வரத்தும் இயங்க முடியாமல் செய்து, முழு நாட்டிலும் கதவடைப்புச் செய்து, மந்திரிசபை கூட இலங்கை மண்ணில் கூட முடியாமல் துறை முகத்தில் நங்கூரம் பாச்சிய ஒரு அந்நிய நாட்டுக் கப்பலில் கூட வேண்டிய நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தியது. அன்று பிற்பகல் பிறப்பிக்கப்பட்ட அவசரகால நிலையின் கீழ் பல உயிர்களைப் பலியெடுத்த ஆட்சியாளர்களின் அடக்குமுறை யந்திரம் தீவிரமாக செயற்பட்ட போதும் அன்றைய பிரதமர் டட்லி சேனநாயக்கா பதவி விலக வேண்டி ஏற்பட்டது.

இந்த ஹர்த்தால் போராட்டத்தின் உத்வேகத்தை சரியாக கணிக்க முடியாத இடதுசாரித் தலைவர்களது கையாலாகாத்தனமும், மலையகத் தோட்டப் பாட்டாளிகள் அதன் முதலாளித்துவ தலைமையால் போராட்டத்தில் பங்கெடுக்காதவாறு தடுக்கப்பட்ட துரோகமும், மக்களின் புரட்சிகர உணர்வை சரியான பாதையில் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்ல முடியாமல் செய்து விட்டன. இந்த சக்திமிக்க மக்கள் போராட்டச் சுவாலையை தனது பாதையில் சரியாகப் பயன்படுத்தியவர் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா ஆவார். இதன் பின்னால்தான் இந்த நாட்டின் வர்க்கப் போராட்டம் சீர்குலையவும் இனக்குரோதம் அரசியல் தலைதூக்கவும் இது ஒரு வாய்ப்பாக அமைந்து விட்டது.

இதுவரை காலமும் தொழிலாளி வர்க்கத்தின் தலைமை இடதுசாரிகள் கையில் இருந்த நிலை மாறி 1956 இன் பின்னர் ஆட்சியாளர்களின் தலைமையில் தொழிலாளி வர்க்கம் படிப்படியாக சரிய ஆரம்பித்தது. 21 கோரிக்கையின் பின்னால் திரண்ட தொழிலாளி வர்க்கம் இடதுசாரி ஐக்கிய முன்னணியின் பின்னால் திரண்ட மக்கள் சரியான பாதையில் ஒன்றுபட்டு செல்வதற்குப் பதிலாக பதவி ஆசை பிடித்து இடதுசாரித் தலைவர்களின் துரோகச் செயல்கள் தொழிலாளி வர்க்கத்தினதும் மாற்றம் விரும்பும் மக்களினதும் மனோநிலையை சீர்குலைத்து விட்டது. இதனால் ஆளும் கட்சிகளாக இனவாத பின்னணியுள்ள ஐக்கி தேசியக் கட்சியும் சுதந்திரக்கட்சியும் மாறி மாறி அதிகாரத்துக்கு வரும் கட்சிகளாக மாறி விட்டன. இதன் தவிர்க்க முடியாத நிலை இந்தப் பேரினவாத கட்சிகளுக்கு எதிராக தமிழ் பேசும் மக்களை அணிதிரளச் செய்தது. இதன் விளைவு மாறி மாறி அதிகாரத்துக்கு வருபவர்களுடன் பேரம் பேசும் ஒரு தலைமையாக தமிழ் பேசும் மக்களின் முதலாளித்துவ தலைமையை மாற்றி விட்டது.

இந்த நிலை தொழிலாளி வர்க்கத்தை மொழிவாரியாக பிளவுப்படுத்துவதிலும் முதலாளித்துவ தலைமையின் பின்னால் தற்காப்புக்கு தொழிலாளர்கள் அடிபணிந்து செல்வதிலும் முடிந்தது. இடதுசாரி இயக்கம் தான் இழைத்த தவறுகளின் காரணமாக பிளவுபட நேர்ந்தது. அதுமட்டுமல்ல மக்கள் ஆதரவு இழக்கும் நிலையும் ஏற்பட்டது. இதனால் மேதினமும் முதலாளித்துவ கட்சிகளின் கேளிக்கைத் தினமாக மாற்றப்பட்டுவிட்டது. இன்று இந்திய கலைஞர்களதும், சீனக்கலைஞர்களதும் களியாட்டத்தினமாக மேதினத்தை ஆளும் கட்சிகள் கொண்டாடுகின்றன. உண்மையில் இது இந்த நாட்டின் தொழிலாள வர்க்கத்திற்கு பெரும் சாபக்கேடாகும். வர்க்க உணர்வை மழுங்கடிப் பதிலும் மேதினத்தின் போர்க்குணத்தை இல்லாமல் செய்வதிலும் இந்த ஆளும் கட்சிகளின் தமாசாக்கள் இந்த நாட்டில் மனித உரிமைகள் ஜனநாயக சுதந்திரங்கள் மறுக்கப்படுவதை மறைப்பதற்கு திரையாக பயன்படுத்தப்படுகிறது.

1953இல் அன்றைய நிதி அமைச்சர் ஜே. ஆர். ஜெயவர்த்தனாவால் அறிமுகம் செய்யப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் உள்ளடக்கமே கடந்த 15 ஆண்டுகளாக நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் மானிய ஒழிப்பு, திறந்த பொருளாதாரக் கொள்கை, தனியார்மயப்படுத்தல் என்பவற்றின் அத்திவாரம் என்பதை இன்று பலரும் நினைவில் கொள்வதில்லை. நிறைவேற்று அதிகாரம் என்பதை இன்று பலரும் நினைவில் கொள்வதில்லை. நிறைவேற்று அதிகாரம் உள்ள ஜனாதிபதியின் ஆட்சியின் கீழ் பின்பற்றப்படும் தேச விரோத விதேச நலன்பேணும் இந்த பொருளாதார மாற்றம் 1953 ஹர்த்தாலின்போது முழு நாட்டு மக்களின் எதிர்பின் மூலம் சகல இனங்களையும் சேர்ந்தவர்களாலும் நிராகரிக்கப்பட்ட ஒன்று என்பதை இந்த மேதினத்தில் அனைத்து தொழிலாளி வர்க்கத்திற்கும் உழைக்கும் மக்களுக்கும் நாம் மீள நினைவு படுத்த வேண்டியது அவசியம்.

சிங்களம் மட்டும் அரசாங்க மொழி ஆக்கப்பட்டதுடன் ஆரம்பமாகி பண்டா செல்வா ஒப்பந்தத்தை நிராகரித்து இந்த நாட்டில் ஆதிக்க சக்திகளால் உருவாக்கப்பட்ட தொடர்ச்சியான இனக்கலவர பாதைதான் இனங்கள் மத்தியில் இருந்து வந்த பரஸ்பரம் புரிந்துணர்வை இல்லாமல் செய்து, தனிநாடு காண்பதைத் தவிர பேச்சு வார்த்தைகள் மூலமோ ஒப்பந்தங்கள் மூலமோ தமிழினம் தனது உரிமைகளைப் பெறமுடியாது என்ற நிலைக்கு தமிழ் பேசும் மக்களை விரட்டியடித்தது என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். தேசிய இன்ப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வின் மூலம் அழிவைத்தவிர எந்த பரிகாரத்தையுத் கான முடியாது; என்பதுகடந்த கால அனுபவங்கள் எமக்கு எடுத்துக் காட்டுகிறது. ஆகவே அரசியல் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்றே ஒரே வழி என்பதை இந்த மேதினத்தில் நாம் வலியுறுத்துகின்றோம்.

இனப்பிரச்சினைக்கு நீதியான தீர்வு ஒன்றைக் காண்பதன் மூலம் தமிழினத்தின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்பதன் மூலம் மட்டுமே மீண்டும் நாம் வர்க்கப் போராட்ட அரசியலை இந்த நாட்டில் தோற்றுவிக்க முடியும். இதற்காக இந்த மேதினத்தில் தொழிலாளி வர்க்கம் உறுதி பூண வேண்டும். தொழிலாளி வர்க்கம் மீண்டும் தொழிலாளி வர்க்க அரசியலை முதன்மைப்படுத்தி முதலாளித்துவ பாதையை நிராகரிக்க வேண்டும். முழு நாட்டு மக்களுக்கும் அச்சுறுத்தலாக உள்ள தனிநபர் சர்வாதிகாரத்துக்கு இட்டுச் செல்லும் இந்த இனவிரோத மதவாத அரசியல் அமைப்பை மாற்றி பல்லின மக்கள் வாழும் நாட்டுக்கு ஏற்ற ஜனநாய அரசியல் அமைப்பை மனித உரிமைகள் ஜனநாயக சுதந்திரங்களை உத்தரவாதப்படுத்தும் புதிய அரசியல் யாப்பை உருவாக்க தொழிலாளி வர்க்கம் தன்முயற்சியை மக்கள் மத்தியில் எடுத்துச்செல்ல வேண்டும். இன்றைய உலக முதலாளித்துவ மேலாதிக்கத்துக்கு சேவை செய்யும் பொருளாதார மார்க்கத்தை நிராகரித்து இந்த நாட்டு மக்களுக்கு சேவை செய்யும் சுதந்திர ஜனநாயக பொருளாதார மாற்றத்தை உருவாக்க தொழிலாளி வர்க்கம் இந்த மேதினத்தில் முழு நாட்டு மக்களுக்கும் அறைகூவல் விடுக்க வேண்டும். நாட்டின் விலைவாசி உயர்வு வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு ஆகியவற்றிற்கு ஏற்ற ஊதிய உயர்வு பெற அனைத்து தொழிலாளர்களும் ஒன்றுபட வேண்டும்.

உலகத் தொழிலாளர்களே ஒடுக்கப்பட்ட மக்களே ஒன்று படுவீர் என்ற உன்னத மார்க்கத்தை முன்னெடுத்துச் செல்ல இந்த மேதினத்தில் நாம் அனைவரும் சபதம் ஏற்போமாக

1. 5. 91.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (EPRLF)

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்